கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 15.06.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நெற்பயிர் அரிசி மதிப்பு சங்கிலிக்கான AgriAdapt காலநிலை கருவி குறித்த பயிலரங்கம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் (CARDS), புது தில்லி உலக வள நிறுவனம் மற்றும் சென்னை தேசிய வேளாண் அறக்கட்டளை ஆகியவை இணைந்து நெற்பயிர் அரிசி மதிப்பு சங்கிலிக்கான **AgriAdapt** காலநிலை கருவி குறித்த இரண்டு நாள் பயிலரங்கம் 14-15 ஜூன் 2024 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றது. **AgriAdapt** என்பது வேளாண் மதிப்பு சங்கிலிகளுக்கான தாக்கங்களை அடையாளம் கண்டு நிர்வகிக்க உதவும் இணையதள கருவி ஆகும். அரிசி மதிப்பு சங்கிலியில் ஈடுபடும் உள்ளீடு விற்பனையாளர்கள், விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், பதப்படுத்துபவர்கள், வங்கியாளர்கள், அரசு துறை அதிகாரிகள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளிலிருந்து அறிவியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் என சுமார் 150 பேர் இந்த பயிலரங்கத்தில் பங்கேற்கின்றனர்.

இந்த பயிலரங்கத்தின் நோக்கம் அரிசி மதிப்பு சங்கிலியில் உள்ள பல்வேறு பங்குதாரர்களை ஒருங்கிணைந்து தற்போது உள்ள **AgriAdapt** காலநிலை கருவியை மேற்படுத்துவதற்க்கான கருத்துக்களை பெறுவதும், காலநிலை மாற்றத்திக்கான தகவமைப்பு உத்திகளை விவாத்திப்பதுமாகும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் தலைமை தாங்கினார். காலநிலை மற்றத்தின் தாக்கங்கள் அதிகரித்து வருவதால் அரிசி மதிப்பு சங்கிலியின் அனைத்து உறுப்பினர்களின் திறனையும் மேம்பாடுத்து முக்கியமானதாகும் என்று துணைவேந்தர் வழியுறுத்தினார். காலநிலை மாற்றத்தினல் மழையின் அளவில் ஏற்படும் மாற்றம், பருவ மழையின் தாமதம் மற்றும் வெப்ப அலை ஆகியவை மேலும் தீவிரம் அடையும் என்று எடுத்துரைத்தார்.

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய இயக்குனர் முனைவர் தே.சுரேஷ் குமார், அவரது துவக்க உரையில் காலநிலை மாற்றத்தினால் பல்வேறு துறைகளில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதை எதிர் கொள்வதற்க்கான தொழில்நுட்ப தேவைகளை வலியுறித்தினார். உலக வள நிறுவன இயக்குனர், முனைவர் நம்பிஅப்பாதுரை, அவர்கள் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை புரிந்து கொள்வதற்கும் அவர்களின் அனுபவ அறிவிலிருந்து ஆதாரமுள்ள ஆராய்ச்சியைக் கற்றுக்கொள்வதற்கும் ஒன்றாக பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். சென்னை தேசிய வேளாண் அறக்கட்டளை இயக்குநர் முனைவர் எம்.ஆர்.ராமசுப்ரமணியம் கூட்டத்தினரை வரவேற்று, இரண்டு நாள் பயிரலங்கத்தின் நோகத்தை எடுத்துரைத்தார். வேளாண் மதிப்புச் சங்கிலியில் ஏற்படும் காலநிலையின் தாக்கங்கள் பற்றி மேலும் அறிய www.agriadapt.org என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**